இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 78 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 10 – வெள்ளிக்கிழமை 27 அக்டோபர் 2023 – வெளியூர் 20 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 78: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 10 - Friday 27 October 2023 - Dak 20 + 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.10.2023) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி, எழுத்தாளர் அரங்கம் சார்பில் எழுத்தாளர் இமையம் தொகுத்துள்ள கலைஞர் எழுதிய 128 புத்தகங்களின் முகப்புகள் மற்றும் அந்த புத்தகங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய "என்றும் இறவா எழுத்துக்காரர் கலைஞர்" என்ற புத்தகத்தையும், "எழுத்தாளர் கலைஞர்" என்ற தலைப்பில் கலைஞர் எழுதிய புத்தகங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள குறும்பட சி.டி.யையும் வெளியிட்டார். இந்நிகழ்வில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், எழுத்தாளர் இமையம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.10.2023) சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் மற்றும் நிர்வாகிகள், அச்சங்கத்தைச் சேர்ந்த மருத்துவ மாணவர்கள் சந்தித்து, நவம்பர் 26ஆம் தேதி கலைவாணர் அரங்கத்தில் நடைபெறவுள்ள மருத்துவ மாணவர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்து அதற்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.

### புல்வாமா தாக்குதலுக்கு

## மோடி அரசு செய்த தவறுகளே காரணம்!

### ஜம்மு - காஷ்மீர் முன்னாள் ஆளுநர் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, அக். 27-

புல்வாமா தாக்குதல் சம்பவத்துக்கு ஒன்றிய மோடி அரசு செய்த தவறுகளே காரணமென்றும், ஆனால் அந்த தாக்குதலை பா.ஜ.க. தனது அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்தி கொண்டதென்றும் ஜம்மு - காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக்குடன் காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி கலந்துரையாடினார். அப்போது அவரிடம், 2019ம் ஆண்டு புல்வாமாவில் தீவிரவாதிகள் நடத்திய கார் குண்டு தாக்குதலில் 40 சி.ஆர்.பி.எப். வீரர்கள் பலியானது குறித்து ராகுல் காந்தி கேள்வியெழுப்பினார். அதற்கு பதிலளித்த சத்யபால் மாலிக், வீரர்கள் இடப்பெயர்வுக்கு 5 விமானங்களை ஒன்றிய மோடி அரசு அளிக்கவில்லை என்றும், இந்த தவறே தாக்குதலுக்கு காரணமாகி விட்டதென்றும் குற்றம்சாட்டினார். புல்வாமா தாக்குதலுக்கு அப்போது ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் காரணம் என்று தாம் ஒருபோதும் கூறவில்லை என்ற அவர், ஆனால் அவர்கள் தங்கள் அரசியல் ஆதாயங்களுக்காக தாக்குதலைப் பயன்படுத்தியதாக தெரிவித்தார். புல்வாமாவுக்கு எப்படி மிகப்பெரிய அளவு வெடிபொருட்கள் வந்தன என ராகுல் காந்தி எழுப்பிய கேள்விக்கு, பாகிஸ்தானில் இருந்து வந்ததாகவும், ஆனால் அது கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் சத்யபால் மாலிக் பதிலளித்தார்.

மணிப்பூர் கலவரத்தின் பின்னணி குறித்து ராகுல் காந்தி எழுப்பிய கேள்விக்கு, மணிப்பூரில் நடந்தது அரசின் ஒட்டுமொத்த தோல்வியை காட்டுகிறது என்றும், கலவரத்தை தடுக்க முதலமைச்சர் எதுவும் செய்யவில்லை என்றும், இதற்காக அவரை பதவியை விட்டு அகற்றவும் இல்லை என்றும் சத்யபால் மாலிக் விமர்சித்தார்.

### முதுகலை பொறியியல் ஆராய்ச்சி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில்

# முதல்வரின் அறிவிப்பு - மாணவர்களை எதிர்கால விஞ்ஞானிகளாக உருவாக்கும்!

## தமிழ்நாட்டுக்கு மேலும் பெருமை சேரும் என கல்வியாளர்கள் வரவேற்பு!

சென்னை, அக். 27-

முதுகலை பொறியியல் ஆராய்ச்சி மாணவர்களை ஊக்குவித்து எதிர்கால விஞ்ஞானிகளாக உருவாக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சிக்கு கல்வியாளர்களிடையே வரவேற்பு கிடைத்துள்ளது. ஆராய்ச்சிக்கு மாணவர்களுக்கு ஊக்கத் தொகை உள்ளிட்ட பல சலுகைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளது மேலும் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிலேயே கல்வி, மருத்துவ துறைகளில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இதற்கு இன்னும் ஊக்கமளிக்கும் விதமாக மாணவர்கள் கல்வி பயிலவும், பெண் கல்வியை ஊக்குவிக்கவும், பட்டப் படிப்பு தொடர என பல்வேறு முயற்சிகளை அடுத்தடுத்து கையில் எடுத்துள்ள தமிழ்நாடு அரசு, ஆராய்ச்சி படிப்பு தொடர்பான பொறியியல் மாணவர்களை ஊக்குவிக்கவும் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக, விண்வெளி துறையில் தமிழ்நாட்டின் சாதனைகள் தனித்துவத்துடன் உலக அரங்கில் அரங்கேற்றப்பட்டுள்ளது. சந்திரயான், ஆதித்யா திட்ட வெற்றிகள் இதற்கு சிறந்த சான்றாக உள்ளது. இந்த திட்டத்தின் இயக்குனர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது கூடுதல் சிறப்பு. அந்த வகையில், ஆராய்ச்சி மாணவர்களை ஊக்குவிக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்மையில் புதிய அறிவிப்பை வெளியிட்டார். அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் 7.5% இட ஒதுக்கீட்டின் கீழ் இளநிலை பொறியியல் படிப்பை முடித்து, முதுநிலை பொறியியல் படிப்பை தொடரும் ஆராய்ச்சி மாணவர்கள் 9 பேரை தேர்வு செய்து அவர்களுக்கு சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இந்த திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு விடுதி, கல்லூரி கட்டணம் அனைத்தும் வழங்கப்படும். இதற்கென தனியாக குழு அமைத்து அந்த குழுவினர் திறமையான மாணவர்களை தேர்வு செய்வர். அத்துடன், 10 கோடி ரூபாய் தொகுப்பு ஊதியம் இதற்கென்று தனியாக ஒதுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். ஆராய்ச்சி படிப்பு மீதான ஆர்வத்தை மாணவர்களிடையே அதிகரிக்கும் விதமாக முதலமைச்சரின் இந்த அறிவிப்பு உள்ளதாக கூறுகிறார், அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் வேல்ராஜ்.

அது மட்டுமில்லாமல் நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் என பல்வேறு திட்டங்களை தீட்டி வெற்றிகரமாக செயல்பட்டு வரும் அரசுக்கு நன்றி தெரிவிப்பதோடு, ஆராய்ச்சி படிப்பு தொடர்பான இந்த புதிய அறிவிப்பு எதிர்கால ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதற்கான சிறந்த படைப்பு என்கிறார் மாநில கல்லூரி முதல்வர் ராமன்.

எதிர்கால விஞ்ஞானிகளே வாருங்கள் என்று வரவேற்கும் விதமாக அரசு கூறியுள்ள இந்த அறிவிப்பு அனைவரின் மத்தியிலும் வரவேற்பை பெற்றதோடு, முன்னுதாரணமாகவும் திகழ்கிறது என கல்வியாளர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

### மக்களின் நம்பிக்கையைப் பெற முடியாத ஒன்றிய பா.ஜ.க. அரசு

## அமலாக்கத் துறையை தவறாகப் பயன்படுத்துகிறது!

### காங்கிரஸ் தலைவர்கள் கண்டனம்!

புதுடெல்லி, அக். 27-

ராஜஸ்தான் சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்த மாநில காங்கிரஸ் தலைவர் கோவிந்த் சிங் தோடாஸ்ரா உள்ளிட்ட காங்கிரஸ் மூத்த தலைவர்களுக்குச் சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தி வருவது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் நம்பிக்கையைப் பெறமுடியாத பா.ஜ.க. அமலாக்கத்துறையை தவறாகப் பயன்படுத்துகிறது என ராஜஸ்தான் முதல்வரும், தோல்வி பயத்தால் பா.ஜ.க. அமலாக்கத்துறையை இறக்கியுள்ளது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும் விமர்சித்துள்ளனர்.

ராஜஸ்தானில் கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் தகுதி தேர்வில் வினாத்தாள்கள் கசிந்த விவகாரம் தொடர்பாக சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து அமலாக்கத் துறை விசாரணை நடத்தி வருகிறது. இந்த வழக்குத் தொடர்பாக ராஜஸ்தான் மாநில காங்கிரஸ் தலைவர் கோவிந்த் சிங் தோடாஸ்ரா உள்ளிட்ட காங்கிரஸ் மூத்த தலைவர்களுக்குச் சொந்தமான 7 இடங்களில் அமலாக்கத்துறை நேற்று திடீர் சோதனை நடத்தி வருகிறது. இதேபோல், ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட்டின் மகனுக்கும் அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியுள்ளது.

#### ராஜஸ்தான் முதல்வர் கண்டனம்!

எதிர்க்கட்சியினரை ஒடுக்குவதற்காக அமலாக்கத் துறை, சி.பி.ஐ. போன்ற விசாரணை அமைப்புகளை ஒன்றிய மோடி அரசு பயன்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன. அதை நிரூபிக்கும் வகையில், ராஜஸ்தான் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அமலாக்கத்துறை சோதனை நடத்தி வருவது, அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சோதனைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள முதலமைச்சர் அசோக் கெலாட், இடைவிடாத அமலாக்கத்துறை சோதனைகளே, தேர்தலில் காங்கிரஸின் வெற்றிக்கு ஆதாரமாக திகழ்கிறது என்றும், மக்களின் நம்பிக்கையைப் பெற முடியாத பா.ஜ.க., காங்கிரஸுக்கு எதிராக அமலாக்கத் துறையை தவறாக பயன்படுத்துகிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

#### மோடி அரசின் செயலுக்கு கார்கே கண்டனம்!

ராஜஸ்தானில் தோல்வி பயத்தால் அமலாக்கத்துறையை பா.ஜ.க. களத்தில் இறக்கி விட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தேர்தல்கள் நெருங்கியுள்ள நிலையில், அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறை உள்ளிட்டவை பா.ஜ.க.வின் உண்மையான தேர்தல் பணியாளர்களாக மாறி விட்டதாக விமர்சித்துள்ளார். ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தலில் தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்துள்ள பா.ஜ.க., தற்போது விசாரணை அமைப்புகளை காங்கிரஸ் கட்சியினருக்கு எதிராக இறக்கிவிட்டுள்ளதாக அவர் சாடியுள்ளார்.

சத்தீஸ்கரை தொடர்ந்து ராஜஸ்தானில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள காங்கிரஸ் கட்சியினருக்கு எதிராக அமலாக்கத்துறை நடவடிக்கையை தொடங்கியுள்ளதென்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். மோடி அரசின் இந்த சர்வாதிகாரப் போக்கு, ஜனநாயகத்துக்கு ஆபத்தானது என தெரிவித்துள்ள மல்லிகார்ஜுன கார்கே, விசாரணை அமைப்புகளை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக தொடர்ந்து போராட்டம் நடத்தப்படும் என்றும், இதற்காக பா.ஜ.க.வுக்கு பொதுமக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

### இஸ்ரேல் - ஹமாஸ் போர் எதிரொலி: நவம்பர் 2 வரை ஏர் இந்தியா சேவை ரத்து!

புதுடெல்லி, அக்.27-

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த 7ம் தேதி திடீர் தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் காசா மீது தாக்குதலை நடத்தி வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 19வது நாள் தாக்குதலுக்குப் பிறகு இருதரப்பிலும் பலி எண்ணிக்கை 8 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேலில் சிக்கியுள்ள இந்தியர்களை தாய்நாட்டுக்கு பத்திரமாக அழைத்து வருவதற்காக ஆபரேஷன் அஜய் என்ற திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்தது. அதன்படி, இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த இந்தியர்களை தனி விமானம் மூலம் அழைத்து வரப்படுகின்றனர்.

இந்நிலையில், போர் காரணமாக டெல் அவிவ் நகரம் செல்லும் அனைத்து விமான சேவைகளையும் நவம்பர் 2ம் தேதி வரை ரத்து செய்துள்ளோம் என ஏர் இந்தியா அறிவித்துள்ளது.

### உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியால்

## பட்டியலிடப்படாத வழக்குகளை நீதிபதிகள் விசாரிப்பது முறைகேடானது!

### உச்சநீதிமன்றம் கருத்து!



புதுடெல்லி, அக். 27-

உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியால் பட்டியலிடப்படாத வழக்குகளை நீதிபதிகள் விசாரிப்பது முறைகேடானது என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் குற்றவாளி ஒருவர் தன் மீதான கிரிமினல் குற்றவழக்கில் உயர் நீதிமன்றத்தில் நிவாரணம் கிடைக்காததால் சிவில் வழக்காகப் பதிவு செய்துள்ளார். அந்த சிவில் வழக்கை விசாரித்த மற்றொரு உயர்நீதிமன்ற நீதிபதி, குற்றவாளி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று இடைக்கால நிவாரணம் வழங்கி உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அப்போதுதான் இந்த முறைகேடு அம்பலமாகியுள்ளது.

சிவில் வழக்கு ஒன்றின் மூலம் 6 எப். ஐ.ஆர்களை இணைத்து உயர் நீதிமன்றம் எப்படி உத்தரவிட்டது. இது மிகவும் அசாதாரணமானது, அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. சட்ட நடைமுறையை முறைகேடாக பயன்படுத்தியுள்ளனர் என்றும், கிரிமினல் வழக்கில் மற்றொரு நீதிபதி நிவாரணம் வழங்காத நிலையில் இந்த விசாரணை எப்படி நடந்தது? என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது. பின்னர் இந்த மனுவை தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம் சிவில் வழக்குத் தொடர்ந்த நபருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நீதிபதிகளுக்கும் சில ஆலோசனைகளை வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

உயர்நீதிமன்றங்களில் தலைமை நீதிபதியால் பட்டியலிட்டு ஒதுக்காத எந்த வழக்குகளையும் நீதிபதிகள் விசாரிக்க கூடாது என்றும், பட்டியலிடப்படாத வழக்குகளை விசாரிப்பது முறைகேடானது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், நீதிபதிகள் ரோஸ்டர் நடைமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.